# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று ஓசூரில் உரையாற்றுகிறார் !



**த**மிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று ஓசூரில் உரையாற்றுகிறார்.

## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| 19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை) | | |
| மாலை 4 மணி | ஓசூர் (பொதுக்கூட்டம்) | ஓசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி |

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதைத் தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 14.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



துறைமுகம் சட்டமன்றத் தொகுதி மதச் சார்பற்ற கூட்டணி வேட்பாளரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபுவை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி. வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பில் பகுதிக் கழகச் செயலாளர்.எஸ்.முரளி,எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என். பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி,வெ.பரிமளம் ரஞ்சித் விஜயாலயன், பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா. பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் – இன்று

# வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் கிராமம் கிராமமாக வாக்குச் சேகரிக்கிறார்!

## மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர் எம்,எஸ்,கே, ரமேஷ்ராஜ் வேண்டுகோள்!

திருவள்ளூர், ஏப்.19-

கும்மிடிப்பூண்டி சட்ட மன்ற தொகுதி மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் டி.ஜெ.கோவிந் தராஜன் வாக்குச் சேகரிப்பு சுற்றுப்பயண விவரம் குறித்து மாவட்ட கழக பொறுப்பாளர் - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு வருமாறு:-

இன்று (19-04-2026 - ஞாயிற்றுக்கிழமை - கும்மி டிப்பூண்டி கிழக்கு ஒன்றி யம்

நரசிங்கபுரம் - காலை 08.30 மணி, நத்தம் - காலை 09.00 மணி, மங்காவரம் - காலை 09.30 மணி, மேலக் கழனி - காலை 10.00 மணி, ஓபசமுத்திரம் - காலை 10.30 மணி, சுண்ணாம்புகுளம் - காலை 11.00 மணி, மெதிப்பாளை யம் - காலை 12.00 மணி, எளாவூர் - பிற்பகல் 12.30 மணி, பெரிய ஓபுளாபுரம் - மாலை 04.00 மணி, எஸ். ஆர். கண்டிகை - மாலை 05.00 மணி, பாத்தபாளை யம் - மாலை 06.00 மணி, சிறுபுழல்பேட்டை - மாலை 07.00 மணி.

மேற்கண்டவாறு கும்மி டிப்பூண்டி கிழக்கு ஒன்றி யத்தில் கழக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் கிராமம் கிராமமாகச் சென்று ஆதரவு திரட்டுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு மாவ ட்டக் கழக பொறுப் பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் வேண் டுகோள் விடுத் துள்ளார்.



உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.சுந்தர் வாலாஜாபாத் பேரூராட்சி மசூதியில் இஸ்லாமிய பெருமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் பி.சேகர், என்.பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.சஞ்சய் காந்தி உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி மற்றும் கழக வெற்றி வேட்பாளர் – கழக மருத்துவரணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டனர். உடன் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர் ஏவிஆர்.கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும் கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளருமான சூரியா கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர்.